# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au

info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2021** **ஆண்டு ஐந்து (விசேட வகுப்பு)**

அனைவருக்கும் வணக்கம்

## மாணவர்களின் கடமை

மாணவப் பருவம் என்பது எமது வாழ்வில் மிக முக்கியமானதும் மகிழ்ச்சியானதும் ஆகும். நாம் பாடசாலைக்குச் சென்று ஆர்வத்துடன் கல்வியைக் கற்கின்றோம்.

படிப்பது மட்டும் எமது கடமை ஆகாது. மேலும் பல கடமைகள் மாணவர்களுக்கு உண்டு. அதாவது ஆசிரியர்கள், முதியோர், மூத்தோர் எல்லோரையும் மதித்தல், அவர்களின் சொற் கேட்டு நடத்தல், ஒழுக்கத்தைப் பேணல், பிறரிடம் அன்பு காட்டுதல் முதலியனவாகும்.

பாடசாலையையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நேரம் தவறாது பாடசாலைக்குச் செல்ல வேண்டும். சக மாணவர்களோடு ஒற்றுமையாகவும், தேவையான உதவிகளையும் தயங்காது முன்வந்து செய்ய வேண்டும்.

இப்படியாக மாணவர்களாகிய நாம் எமது கடமைகளை சரியாக செய்வோமாயின் எமது வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நன்றி

வணக்கம்